

பொய்யாமொழி

ஆசிரியர்—ம. பாஸ்கரனார்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
OCT 1950
MADRAS

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஆவணி 28 (13—9—50) புதன்கிழமை. | மணி 3

சங்க நாதம்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

திங்களொடும் செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும் உடுக்க ளோடும்
மங்குல் கடல் இவற்றோடும் பிறந்ததமிழுடன் பிறந்தோம் நாங்கள், ஆண்மைச்,
சிங்கத்தின் கூட்டமென்றும் சிறியோர்க்கு ஞாபகம்செய் முழங்கு சங்கே!

சிங்களஞ்சேர் தென்னாட்டுமக்கள்
தீராதி தீரரென் றூதூது சங்கே!
பொங்கு தமிழர்க் கின்னல் விளைத்தால்
சங்காரம் நிசமெனச் சங்கே முழங்கு!

வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோளெங்கள் வெற்றித் தோள்கள்!
கங்கையைப்போல் காவிரிபோல் கருத்துக்கள் ஊறுமுள்ளம் எங்கள் உள்ளம்
வெங்குருதி தனிற்கமழ்ந்து வீரஞ்செய் கின்றதமிழ் எங்கள் மூச்சாம்!

வார இதழ். ★ விலை அணா 1.

வாழ்த்துச் செய்திகள்

கொ. இரா. விசுவநாதன்,
ஆவணப்பதிவாளர், & தலைவர்,
உ. தா. வன்னியர் கல்வி வளர்ச்சிக் கழகம்
திட்டகுடி. 1—9—50

அன்புடையீர்!

தாங்கள் "பொய்யாமொழி" எனும் கிழமை யிதழ் தொடங்கும் செய்தியறிந்தேன். தங்கள் தொண்டு நாட்டுக்கு நலம் அளிப்பதாக.

ஃ ஃ ஃ

அ. ரெ. சீனிவாசன்,
மார்க்கட் காண்ட்ராக்டர்,
அம்பாப்பூர். 1—9—50

அன்புடையீர்!

தங்கள் பொய்யாமொழி வாரத்தாளைப் பார்த்தேன். சந்தோஷம்.

சகல கட்சிக்காரர்களும் வெறுப்பின்றி, விரும்பி படிக்கக்கூடிய அளவிலே புதியமுறையில் பத்திரிகை இருக்கவேண்டுமென்பது என் விருப்பம்.

ஃ ஃ ஃ

M. மாரிமுத்து,
தி. மு. கழகம், அரியலூர். 3—9—50

அன்புள்ள ஐயா!

பொய்யாமொழி கிடைக்கப்பெற்றேன். வள்ளுவர் குறளை வாரி இறைக்க முனைந்து நிற்கக் கண்டேன் மகிழ்ச்சி. குறள் பரவ பொய்யாமொழி வளருமாக!

ஃ ஃ ஃ

S. P. முத்துக்குமாரசாமி B. A. (class)
தத்தனூர். 5—9—50

பேரன்புடையீர்!

தங்கள் பொய்யாமொழி திருவள்ளுவர் வகுத்த வழியை பின்பற்றி நாட்டுக்கு நலம் பல விளைய உழைக்கும் என்று எதிர்பார்க்கிறேன் அவதியிலுழலும் ஊழவர்களின் துன்பத்தை எடுத்துக்காட்டும் பேச்சாளனாகவும், அநீதி இழைப்பவர்களுக்கு சம்மட்டியாகவும், அரசாங்கத்திற்கு வழிகாட்டும் அமைச்சனாகவும், உண்மை, நீதி இவைகளுக்குப் பாடுபடும் நேர்மையாளனாக பணியாற்றுமாக.

குலத்துக்கொருநீதிகொண்ட மனுநீதியை ஒழித்து, ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று முழங்கும் வள்ளுவன் குறள் வையகமெல்லாம் முழங்க தங்கள் ஏடு வகை செய்யுமாக!

நாட்டிலே அறம் தழைத்து, பொருளும் பெற்று, மக்கள் இன்பம் அடைவார்கள் என்று எண்ணுகிறேன். வள்ளுவன் குறள் வாழ்க! பொய்யாமொழி தழைத்தோங்குக!

ஃ ஃ ஃ

S. ஸ்ரீராமுலு,
போட்டோகிராபர். (தி. மு. க.)
கும்பகோணம். 7—9—50

வணக்கம்.

பொய்யாமொழி மணி இரண்டும் கிடைக்கப் பெற்றேன். உள்ளம் பூரித்தேன்.

தென்னாட்டில் சூதும் பித்தலாட்டமும் நிறைந்து, கும்மாளம் அடித்துவரும் ஒரு சில குள்ளநரிக் கூட்டத்தின் கொட்டத்தை அடக்க பொய்யாமொழி பயன்படுமென நினைக்கிறேன்.

குறிப்பாக தமிழ்நாட்டின் தன்மானத்தோழர்கள் பொய்யாமொழியை ஊக்குவிப்பதுடன், அவர்களால் முடிந்த தொண்டையும் புரிந்து ஆவன செய்வார்களென நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

சோம. கோவிந்தசாமி
தலைமையாசிரியர்,
போர்டு ஆரம்ப பாடசாலை
ராமநல்லூர். 8—9—50

அன்புடையீர்!

உலகம் அணுகுண்டை தாண்டி, ஹைட்ரஜன் குண்டை நோக்கிச் செல்லும் விஞ்ஞான காலமாகிய 20ம் நூற்றாண்டில், நம் தாலூகா சரித்திரத்திலேயே முதல் முதலாக பொய்யாமொழி என்ற வார இதழ் வெளிவருவதைக்கண்டு மன மிக மகிழ்வு கொண்டேன்.

பத்திரிகை பெயருக்கேற்றாற்போல் அதில் வரும் விஷயங்களும் பொய்யாமொழியாகவே வந்து அரசியல் கட்சிகள் என்ற சுழலில் சிக்கி தவிக்காது தேச முன்னேற்றத்திற்குப் பாடுபடுமாயின் உலகில் தமிழன் வாழும் பகுதியெங்கும் பொய்யாமொழி சுற்றித் திகழ்ந்து சிறப்புற்று வளரும் என்பதில் சந்தேகமில்லை. அந்த சக்தியை ஆண்டவன் தங்கட்கு அருள்வானாக!

ஃ ஃ ஃ

மூன்றாம் பக்கத் தொடர்ச்சி:

முதலானோர் செய்வமென — தெய்வநிலைப் பெற்றவர்களென இன்று மக்களால்மதிக்கப்படுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம் அந்நிலையில் அவர்கள் மதிக்கப்படக் காரணம் என்னவோ? அவர்களின் தூய அறவுநிலை தானே! அவ்வறிவுக்குக் கல்வியும், கல்விக்கு எழுத்தும் அடிப்படையல்லவா? அத்தகைய எழுத்தைத்தான் — அறிவைத்தான் உலக முழுமுதல் இறைவனாகக்கொள்ள வேண்டும் என வள்ளுவரும் கூறுகின்றார். இவ்வகையில் அம்முதற் குறளுக்குப் பொருள் கொள்வதே ஏற்புடையதாகக் காணப்படுகிறது. வள்ளுவரின் பொதுநோக்குக்கும் பொருத்தமுடையதாகவே இருக்கின்றது இதனை அறிஞர்உலகம் ஏற்கும் என்றே துணிவுகொள்ளுகிறேன்.

"வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன்கு
உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கு ஒருநீதி"

———

“முதற் குறளும்-முழுமுதற் கடவுளும்”

(புலவர். ப. அரங்கசாமி)

வள்ளுவரின் கடவுட் கொள்கையைக் குறித்து இன்று நாட்டில் பல்வேறு கருத்துமாறுபாடுகள் காணப் படுகின்றன. மதவாதம், அதாவது வள்ளுவர் எம் மதத்தைச் சார்ந்தவர் என்ற வாதம் ஒருவாறு அடங்கி, அவர் கூறிச்செல்லும் கடவுள் எது, கடவுளைக் குறிப்ப தாகக் கடவுள் வாழ்த்தில் அவர்கூறிய சொற்களால் உணரப்படும் பொருள்யாது எற்றிவ்வாருன ஆராய்வில் மக்கள்கவனம் திரும்பி நிற்கின்றது. கடவுள் வாழ்த்தான பத்து குறள்களில், எட்டு குறள்களில்தான் கடவுளைக் குறிக்கும் எட்டு பொதுப்பெயர்களைக் கூறியுள்ளார்கள். ஆதிபகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினுன், வேனடு தல் வேண்டாமை இலாதவன், இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதவன், அறவாழி அந்தணன் என்ற இவ்வெட்டுச் சொற்களுமேயாம் 9-வது குறளிலும் ‘எண்குணத்தான்’ என்ற ஒருபெயரைச் சொல்லியிருந்தாலும், அதனை தனியே மேலே கூறியவை போல ஒருபெயராகக் கொள்ளாமல் “மேற் கூறிய எட்டு குறள்களிலும், கூறப்பட்டதான எட்டு குணங்களை உடையவன்” என்று பொருள் கொள்வது பொருத்த முடையதாக இருக்கின்றது. அதோடு, எண்குணம் என்றது “திருமாலின் அஷ்ட கல்யாண குணங்களைக் குறிப்பதாகும்; ஆகவே, வள்ளுவர் வைணவ மதத்தவர் என வைணவர்களும்; எண்குணம் என்பது அணிமா முதலிய அஷ்டமா சித்திகள்தான், எனவே அவற்றை யுடைய சைவமதத்தைச் சார்ந்தவரே வள்ருவர் என்று சைவர்களும் சண்டையிடும் மதவாதமும் தோன்ற இட மில்லாது போகிறது.

இந்நிலையில் ஒன்று நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். வள்ளுவர் குறள் எழுதுங்கால், தமிழகத்தில் ஆரியவழக்கம் ஊன்றிப்போய், தமிழினம் கொண்டிருந்த இயற்கையை வணங்கும் இறைவணக்கமுறை சீரழிந்திருந்தது என்பதை நாம் மறக்கக்கூடாது மதம், சமயம் என்ற பெயரால் பலகடவுள்களும், பல்வேறு உருவத்தோற்றங் களும் கற்பிக்கப்பட்டிருந்தன.

அதனால்தான், கடவுளைக் குறிப்பதாக நாட்டில் வழங்கிவந்த பல பெயர்களையும் வள்ளுவர் கூறவேண்டி வந்தது. அவ்வாறு பல பெயர்களைச்சொன்னாலும் அவற் ருல் உணர்த்தப்படும் பொருள் ஒன்றே ஒன்றுதான் — பல அல்ல என்பதை வலியுறுத்துகிருர் வள்ளுவர்.

இன்றையநிலையில், கடவுளைக்குறிப்பதாக வள்ளுவர் கூறிய சொற்களை நாம் ஆராயுங்கால், பெருங் கவனங் கொண்டு அச்சொற்களையும், அவை குறிக்கும் பொருளை யும் ஆராயவேண்டும். அவ்வாராய்ச்சியின் முதல்நிலையாக முதல் குறளைப் பார்ப்போம்.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”

“எழுத்துக்கெல்லாம் ‘அ’ என்ற எழுத்து முதலாவ தாக இருப்பதைப்போல், உலகத்திற்கு ஆதிபகவன் முதலாவதாக இருக்கிருன்” என்றே இக்குறளுக்கு சாதாரணமாகப் பொருள் கூறப்பட்டு வருகிறது. ‘ஆதி பகவன்’ என்பதற்குப் பலப்பல பொருளும் கண்டார்கள்.

ஆதிபகவன் என்பது கடவுளுக்குரியஒரு பெயராகவே கொள்ளப்பட்டது.

இப்பொழுது இக்குறளுக்கு கீழ்க்கண்டவாறு பொருள் காண்போம். ஆராய்வோம். அதனல் ‘ஆதி பகவன்’ என்பது யாரைக்குறிக்கிறது என்ற வாதப்பிரதி வாதந்திற்கு இடமில்லாமல் போவதோடு வள்ளுவரின் கடவுட் கொள்கையையும் ஒருவாறு அறியவும் முடிகிறது. இம்மாதிரி பொருள்கொள்வோம்:—

“உலக முதற்று ஆதிபகவன் அகரமுதல எழுத்து எல்லாம்” அதாவது, உலகத்தின் முழுமுதற்பொருளாக உள்ள பகவான் — இறைவனுவது “அ” என்ற ஒலியை முதலாக உடைய எழுத்துக்களேயாகும்” என்பதாம். எனவே, எழுத்துக்களே உலகத்தின் இறைவனுகும் என்பது பெறப்படுகிறது. எழுத்துக்கள் எனக் கூறி யிருப்பது “சுருங்கச்சொல்லி விளங்கவைத்தல்’ என்னும் விதிப்படி இங்கு எழுத்தாலாகும் கல்வி, கல்வியாலாகும் அறிவு, அவ்வறிவுடைய அறிஞன் என்பதைக் குறிப்ப தாகும் எனவே தூய அறிவும், அவ்வறிவுடைய அறிஞனுமே கடவுளாவான் என்பதாம் இதனை வலி யுறுத்தியே இரண்டாவது குறளிலும் ‘வாலறிவன்’ எனக் குறித்துள்ளார்.

மதவாதத்திற்கப்பாற்பட்ட பெரியார்களெல்லாம் அறிவையே தெய்வமென—கடவுளாகக் கொண்டார்கள் என்பதை இங்கு நாம் மறக்கலாகாது.

“சிந்தமிசை நடகொண்ட அறிவான தெய்வமே
தேசோமயானந்தமே” —எனவரும்

தாயுமான அடிகளார் திருவாக்கும் இதற்குத் துணை செய்கின்றது.

புத்தர், இயேசுநாதர், முகமதுநபி, குருநானக், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள்

[தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க]

பொய்யாமொழி
வார இதழ்
சந்தா விபரம்

ஆண்டு	ஆறு மாதம்	தனிப்பிரதி
3 0 0	1 12 0 0	0 1 0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

பொய்யாமொழி
ஆசிரியர்-ரா.பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, ஆவணி 28 புதன். { மணி 3

"மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

தனக்கென வாழாது அறிவில் மேம்பட்ட நல்லொழுக்கமுடைய ஒருவனை பின்பற்றி அவ்வழி நடத்தலால் நடப்பவர்களின் புகழ் அழிவுறாது என்பது பொருத்தமாகும்.

ஃ ஃ ஃ

குறிப்பு

"கன்னலட்ட என்சிற்றூர் என்போ றுள்ளம்
கடுகுக்குநேர் மூத்த துவரை யுள்ளம்"

என்பதற்கேற்ப நான் வெளியிட்ட இரண்டு வெளியீட்டிலும் எழுதிய தலையங்கத்தில் பெருத்த முக்கிய மற்றைய குறைபாடுகளை கூறாமல் விட்டதாக நேயர்களால் கேள்விபட்ட சில வதந்திகள் தென்பட்டன. ஆனால் அகக் கண்முன் தோன்றித் தோன்றி மறையாமல் சதா ஒலித்துக்கொண்டிருந்த உ.தா. கிராமவாசிகளின் எளியவாழ்க்கையும் இன்னலும் இந்தகாடாரம்பமான குடிக்கத்தண்ணீர், குளிக்கத் தண்ணீர் போன்ற அத்யாவசிய தேவைக் குறைபாடுகளை நினைக்குந்தோறும் ஆறில்லாஊருக்கு அழகுபாழ் என்று வலியுறுத்தியிருந்தும் சிறப்பாக, மூவேந்தர்களில் ஒருவனாகிய சோழனால் ஆளப்பட்டு குமரிமுதல் இமயம்வரை சென்று கொடி பொறித்து நாட்டையாண்டு, சோழவள நாடு சோறுடைத்து என்று அழகியமுறையில் சித்தரித்து தலைநகராமாய்க் கொண்டு உள்கோட்டை என்ற மறைந்த கோட்டையும், கெங்கைவரை சென்று செங்கோல் செலுத்தியதினால் கெங்கை கண்ட சோழபுரமென்று காரணப் பெயராய் வைத்தும் கிடாரம்(பர்மா)வரைசென்று ஜெயித்து கிடாரங்கண்டான் என்றுபெயரிட்டும்ஆளப்பட்டு அதற்கு சான்றுதரும் முறையில் ஆயுதங்களை சேகரித்து வைத்ததினால் ஆயுதக்களம் என்று பெயர்தாங்கிய ஊரையும் நியமித்து, பொன்னாற்றில் கால்வாய்பிரித்து பலமைல் நீளம் பெரிய ஏரியாய் பொன்னேரியையும், மற்றைய புதுக்குடி பெரியஏரியை 10-12 மைலுடைய பெரியதொரு ஏரியும்கட்டி பலவெற்றிகள் கண்டதின் காரணமாய் அமைந்த வெற்றிகண்டசோழபுரம் எனும் ஜெயங்கொண்டசோழபுரத்தை தாலுக்காவின் தலைமை ஆபிஸ்கள் கொண்ட தலைநகரமாய், உடையார்பாளையம் தாலுக்கா இருந்துகொண்டிருக்கிறது.

மேலும் எந்த தாலுக்காவிலும், ஜில்லாக்களிலும் காணப்படாத விந்தையான நரம்புச் சிலந்தி என்ற ஒரு நோய் வரக்கூடியதுமான பகுதியைக்கொண்டதும், தண்ணீரை கையிலோ கிளாசிலோஎடுத்தால் சற்றேறக்குறைய சினிமா டிராமாக் கொட்டகைகளுக்கு முன்னர் வைத்துள்ள காபி, டீகடைளில் தயாரிக்கப்படும் காபி டீ நிறத்தையொத்ததும், 100 — 120 அடிகள் வரை வெட்டினாலும் தண்ணீர்கிடைக்காத இந்த துர்பாக்யம் வாய்ந்த தாலுக்காவையும், அங்கே பிறந்து வளர்ந்து வாட்டமடையும் பக்களையம் நேரே காணும்போதும், நேரே மற்றய உணவுப் பற்றுக்குறைவுடைய மற்றைய ஜில்லாக்கள் தாலுக்காக்களின் சிறுமையும், அவைகளுக்கு எங்கெங்கே நீர் தேக்கங்களுக்கு வேண்டிய அணையோ, தடுப்போ சரியான விபரங்கள் ஆங்காங்குள்ள பெரியார்களால் தெரிந்துகொள்ள இன்னும் வாய்ப்பு பெறாததாலும், தெரிந்து அவஸ்தைப்படும் அன்பர்களும் நமது நாட்டு மக்களாகையாலும் ஒரு சில லக்ஷக்கணக்கான மக்கள் படும் அவஸ்தையை எடுத்துக் கூறவேண்டியது கடமையாகிறது.

இந்தசங்கடங்களினின்று விடுபட வேண்டியவைகளை சொல்லவேண்டிய அவசியம் தவிர்க்க முடியாதது என்பதாலும், சுருங்கிய 8 பக்கங்களில் கொண்ட குறைந்த

...ளுள்ள நம் எட்டில் இடமின்மையாலும் நாட்டு நிலை கருதி சில வாழ்த்துக்கள் தேவையும் பிரசுரிக்க வேண்டியதிநிமித்தமும் தங்கள் தங்கள் ஊரில் நடக்கும் குறைபாடுகளை எடுத்தெழுதாதது கண்டு கொஞ்சம் வெறுப்படையும் நண்பர்களுக்கு வேண்டுகோள்விடுக்கும் முறையில் அன்புடன் வேண்டிக்கொள்வது, தவிர்க்க முடியாதகுறை பாடுபட்டு பிறகு தவிர்க்க முடியாதிருந்த குறைகளுக்கு பாடுபடுதலே சிறந்த சீரிய கொள்கை எனக்கருதி கீழ்த்தரமுள்ளவர்கள் நடுத்தரம் உயர எண்ணுவதும், நடுத்தரமுள்ளவர்கள் மேநிலை எய்த நினைப்பதும், மேநிலையுள்ளவர்கள் அதற்கு மேநிலை கருதுவதும் குறிக்கோள் கொண்ட நம் நாட்டு சகிக்க முடியாத பஞ்சநிலையில் ஒருபிடி நெல்லரிசி சோறுண்ணுவதற்கு வாய்ப்பற்று வேலையுமற்று தவிக்கும் நமது அருமை மக்கள் பசிக்காக பட்டினிக்காக பஞ்சம் தாளமுடியாத நிலையில் கிடைக்கும் அந்நிய நஞ்சைப் பிரதேசங்களில் பட்டினிச்சாவைத் தவிர்க்க தன் உயிரை காப்பாற்றி வாழ்க்கையை நடத்தி சலை மூட்டையை சுமந்துகஷ்டப்பட்டு உயிர் வாழும் நிலையில் இர்தாலூகா மக்கள் திருடனிலும் கேடாக கொடிய வஞ்சனை செய்த கொலைகாரனிலும் கேடாக மதித்து சட்டம் அவர்களை சிறைக்கு தள்ளுவதை நினைக்க நெஞ்சம் வேகிறது.

ஷாப் சட்டமும், பாதிக்கப்பட்ட கைத்தறித்தொழிலும், உப தொழிலும்.

நம் நாட்டில் முக்கியமாக தேவையுடையதில் ஒன்று உணவும், மற்றொன்று உடையுமாகும் உடை தயார் செய்வதில் தென்னாட்டை பொறுத்தவரை கைத்தறி நெசவுத்தொழில்தான் முக்கியத்துவம் வாய்ந்த, சிறந்த கைத்தொழிலாகும் ஷடி நெசவுத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல லக்ஷம் கைத்தறி நெசவாளர்களும் உப தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களும் சுமார் கோடிக்கணக்கான மக்களைக் கொண்டதாகும் ஷடியார்களின் வாழ்க்கைத் தரமானது சில பல வருஷகாலமாய் நெசவுக்கு போதுமான நூலும், வாழ்க்கை தேவைக்கு ½ வாசிகூட காணாத கூலியுமாகும் அதிலும் குறிப்பாக வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்கள் 1-க்கு 5, 6, 7 மடங்குக்குமேல் விலை விஷம்போல் ஏறிப்போய் வாழ்க்கை நடத்த வழியற்று பல குடும்பங்கள் பசிக்கொடுமை தாளாது வேலையின்றி பஞ்சைகளாய் ஊர் ஊராய் பிச்சை எடுத்துண்ணும் நிலைவரை ஏற்பட்டுவிட்டது என்றால் மிகையாகாது.

அது இந்நாட்டு மக்களுக்கே பெரியதொரு குறைபாடாக அமைந்து உணவுக்கும் ஏன் உடைக்கும் திண்டாடும் இந்நிலையில் பெருத்த வியாபாரிகளுக்கு சலுகையளித்து வெளி நாட்டுக்கு நூல் அனுப்புவது என்பது வருந்தத்தக்கதொரு கல் நெஞ்சமுடைய செயலாகும். அதை விஷயமாய் பின்னர் ஆராய்வோம் நிற்க தற்காலம் தெலுங்கு கற்றுக்கொள்ள எண்ணிய ஒருவர், குதிரைக்கு குர்ரம் என்றவுடன் மற்றெல்லாவற்றையும் தெரிந்து கொண்டதாகஎண்ணி யானைக்கு அர்ரம் பூனைக்கு பூர்ரம் என்று சொன்ன கதைக்கேற்ப ஷாப்பு சட்டம் பொருந்தாத இடத்துக்கும் செலுத்த எண்ணப்பட்டு நடைமுறையில் கொண்டுவர முயற்சித்துவந்துளதாய் அறிகிறோம் தற்போது கிடைக்கும் கொஞ்ச நூலையும் நெசவுநெய்துகொள்வதற்கும் அதன் உபதொழில்களான நூல் இழைத்தல், பாவு ஓடுதல், பாவு செய்தல், நெசவு நெய்தல் போன்ற காரியங்களானது மாதச்சம்பளங்களுக்கு ஏற்பட்டுள்ள, ஷாப்பு சட்டங்கள் போன்ற 8 மணி நேர வேலை என்பது பொருந்தாது. ஏனெனில் தங்கள் தங்களுக்கு தறிக்கு வேண்டிய கொஞ்ச நூல் கிடைத்தபோது இழைத்து ஓடி பாவு செய்து அச்சில் பிணைத்து அல்லுபிடித்து தறியில் மாட்டி நெய்வதற்காக ஆரம்பித்தால் காலை 6-மணிக்கே தறியில் உட்கார்ந்து நெய்ய ஆரம்பித்தால் கொஞ்சம் சுறுசுறுப்பாக வேலை நடைபெறும். ஆனால் அதுவும் சீதோஷ்ண நிலைக்கு தக்கவாறு வேலைநேரங்களை மாற்றி செய்யவேண்டிவரும். தட்பவெப்பநிலையை அனுசரித்து செய்ய வேண்டிய தொழிலாகும். மேலும் கைத்தறி நெசவானது மாதச் சம்பளம் போன்ற உத்தியோகம் கடை குமாஸ்தாக்கள் போன்ற மற்றைய வேலையாட்களின் குறிக்கோளைக் கொண்டதன்று. அநேகமாக சொசைட்டி போன்ற ஸ்தாபனங்களிலும் ஜவுளி வியாபார தனி முதலாளிகளிடமும் நூல் எடுத்து நெய்பவர்களும் காண்டிராக்ட்டு போல் 8 — 8 முழம் ஜோடி 6 கொண்ட நெசவும் அங்கவஸ்திரம் 5 முழம்கொண்டது 25 துண்டுக்கு நெசவும் சேலைத்தரியானது சில இடங்களில் பாவுக்கு 90 முழமும் மற்றைய சில இடங்களில் வேறு முழங்களும் உள்ள வகைகளுக்கு நூலையும் கூலியையும் வாங்கிக்கொண்டு வந்து அதை குறிப்பிட்ட கெடுவுக்குள் கொடுக்க வேண்டியவர்களாவார்கள். ஆனால் சுயேச்சையாக தங்களுக்கு எவ்வெப்போது வேலை செய்ய இயலுமோ, அவ்வப்போது நெய்துகொள்ள வேண்டியதும் ஆனது. அதிலும் எட்டிப்பார்த்தால், எட்டெழைகுறையுமென்று சொல்லுவது பழமொழி. தேவைக்கேற்ற அரைவாசி அளவுகூட வாழ்க்கைக்கு தேடமுடியாத இந்த நாளில் தட்பவெட்பம் பாதிக்கக்கூடியதும், பாவுகளில் சரியாக கஞ்சிவைத்து பதத்தில் பாவு செய்யப்படாமல் போனால் பாவு நெய்வதற்கு லாயக்கற்றுப்போய்விடும். இதுமாதிரி உள்ள இந்த தொழிலையும் இதற்கு உபபலமாயுள்ளதும் நூல் இழைத்து அதை ஆலையில் அல்லது கையால் ஓடி ஒன்று சேர்த்து பாவு செய்யக்கொடுத்தால் ஷடி பாவு செய்பவர்களும், அவர்களுடைய வேலையும் ஜனவரி to மார்ச்சு வசந்தகாலம் ஏப்ரல் to ஜூன் கோடைகாலம் ஜூலை to செப்டம்பர் இலையுதிர்காலம். அக்டோபர் to டிசம்பர் மாரிகாலம் ஷடி காலங்களில் தட்பவெப்பத்திற்கேற்ப, பாவுகளை கஞ்சிபோட்டு காயவைப்பதற்கு பில்போடுவதற்கும் பாவுகளை நல்ல பதத்தில் நெசவு நெய்வதற்கு லாயக்காய் எடுக்க ஒவ்வொரு பாவுக்கும் கால அளவை கட்டுப்படுத்த முடியாது மேலும் பாவு செய்பவர்கள் பாவு பேரில் காண்டிராக்டாக கூலிவாங்கி ஷடி கூலியை பங்குதாரர்களாகவே பாகம் பிரித்து இடத்துக்கும் கஞ்சிக்கும் அதற்குவேண்டிய பில் முதலிய சான்களுக்குமாகவும், தவிர வியாபாரிகளிடமும் சொசைடிகளிடமும் பாவுகளை நம்பிக்கையாய் எடுத்துக் கொண்டு வருவதற்குமாகவும் பாவுகளை குறித்த காலத்தில் செய்து கொடுப்பதற்கும் பொறுப்புள்ள ஒருவருக்கு பங்குமாக வைத்து ஷடி கூலியை பாகம் பிரித்துவருகிறார்கள். மேலும் ஷடி வேலையானது ஜவுளிதினுசுகள் (Hand Loom's) துணிகள் விற்கும் பரபரப்பான காலங்கள் என்பது சிலஉண்டு. அதாவது தைமாதத்தில் பொங்கலுக்கு முன்னும், தீபாவளிக்கு முன்னும் கொஞ்சம் ஜவுளிகள் பரபரப்பாய் விற்கும் காலமாகும். அந்தக் காலங்களில் கைத்தறி நெசவாளர்களும், அதற்கு உறுதுணையான இழைப்பது பாவு ஆலைகளிலோ, கையாலோ பாவு வோடுவது, பாவு செய்வது போன்ற வேலைகள் காலம் நேரம் கருதாமல் செய்யவேண்டிய தொழிலாகும். பொங்கல், தீபாவளி போன்ற காலங்கள் முடிந்தவுடன் கிட்டதட்ட மாதக்கணக்கில்கூட வேலையின்றி சும்மாயிருக்கவேண்டிய நிலையுமிருக்கும் ஆதலால் வேலையற்றிருக்கும் நாளுக்கும் சேர்த்து உணவு தேடிக்கொள்ள வேண்டியவர்களாவார்கள். நிரந்தரமான மாதச்சம்பளமுடையவர்களுக்கு வேண்டிய அவசியமான ஓய்வு நேரங்கள் மேற்கண்ட கைத்தறி நெசவாளர்களுக்கும் அது சம்மந்தமான மற்றைய இழைத்தல், பாவு ஓடுதல், பாவு செய்தல் போன்றவர்களுக்கும் ஷாப் சட்டம் எக்காரணத்தைக் கொண்டும் பொருந்தாது. ஆகவே குறிப்பிட்ட ஷாப் சட்டத்தை ஷடியார்கள்பேரில் சுமத்த வேண்டாமென்று சம்மந்தப்பட்ட இலாக்காக்களுக்கும், சர்க்காருக்கும் பணிவன்புடன் எடுத்துக்கூறுகிறோம்.

புது வாழ்வு

நா. தமிழ்மணி, கரந்தை.

ஆருயிர்த்தோழரே !

தூண்டிற்புழுவாய்த் துடிக்கின்றேன் தங்கள்நலனறிய நாம் எதிர்நோக்கிய வாழ்க்கை இங்ஙன இன்னல் கடலிலாழ்த்தும் என ஒரு சிறிதும் எண்ணவில்லை. அதற்காக என்னை கோபிக்காதிர்கள், மங்கையின் சம்மதமின்றி மடமையில் மூழ்கியிருக்கும் என் பெற்றோர்களின் சமூகக் கட்டுப்பாட்டுக்கு நான் பலியிடப்பட்டேன், இன்று நான் வடிக்கும் கண்ணீராவது எதிர்காலப் பெண்ணினங்களுக்கு ஓர் எச்சரிக்கையா யிருக்கட்டும்.

அன்று காதலுலகில் பச்சை மரங்களின் பந்தரில் உச்சிப்பொழுதானதையும் மறந்து எவ்வளவு இறுமாப்புடனிருந்த இளம் ஜோடிகளை இப்பொழுது சமூகம், கட்டுப்பாடு எனும் வாளினால் நம் ஒன்றிய அன்பை, உண்மைக்காதலை, தூய உள்ளத்தைத் துண்டிக்கத் துணிந்துவிட்டது. நம்மைத் துச்சமென எண்ணி நினைக்கவே நெஞ்சம் குமுறுகின்றது...!

அந்தஸ்து, பணம், கவுரவம் எனும் விலைகொடுத்து வாங்கிவிட்டார் என்னை. உள்ளத்தைக் கொள்ளை கொண்ட உத்தமரே ! என் உடலைத்தான் அவர் விலை கட்டுப்படுத்துமே யன்றி என் உள்ளத்தைப் பறிக்க அவருக்கு உரிமை ஏது...! அலைகடலினும் ஆழமுள்ள பெண்மை உள்ளத்தின் மேலான தோற்றத்தைக்கண்டு கானல் நீர் என கருதவேண்டாம். என் உள்ளம் உங்களைக் காணத் துடிக்கின்றது. எங்கு நோக்கினும் உங்கள் எழிலுருவம் நீக்கமற நிறைந்திருக்கிறது. என் உள்ளத்தவிப்பை அறிவிக்க இயலாது எழுத்துதவியால்.

உங்கள் பதிலை ஒவ்வொருவினாடியும் எதிர்பார்த்து ஏங்கும்

தங்கள் உயிர்த்தோழி,

ராஜம்.

ஃ ஃ ஃ

அடி துரோகி !

வெளுத்ததெல்லாம் பால் எனும் உள்ளங்கொண்ட என்னை அன்று மாலையிலே சாலையோரத்தில் உன் வேல் விழியால் என்மேல் மாயவலைவீசிய மட்டரகப் பன்னாடையே ! கடிதமா எழுதுகின்றாய்......! நீலி! அன்று எவ்வளவு மறுத்தேன் ராஜம்! நாம் எண்ணுவது போல் ஏதும் நடக்காது, ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வழங்கும் அநாகரீகச் சமூகம் இருக்கும்வரை வர்ணாச்சிரம சமூக சாக்கடையில் நெளியும் நீ ஓர் அடிமைப்புழு. உன்னைக் கொத்திக்கொண்டு போக எத்துனையோ காக்கைகள் வட்டமிடும் பணம் எனும் முலாம் பூச்சுடன் அவற்றிலொன்றுக்குத்தான் நீ இரையாக முடியும், அக்காக்கையோ தன் பசியைத்தீர்த்துக் கொள்ளுமபொருட்டு வேறொருபுழுவையும் நாடக்கூடும் வர்ணாச்சிரம சமூக சாக்கடையில் மேலும் பல அடிமைப் புழுக்கள் தோன்றுவதால்......" என்றியம்பியதற்கு நீக்கள் அப்படி சொல்லாதிர்கள்.

"நீங்கள் ஓர் பழத்தோட்டம், நான் பசியுள்ளகிளி இறக்கை ஒடிந்தாலும் ஓடிவருவேன். காதலும் கடமையும் பின்னிக்கிடப்பதை இக்கசடர்களுக்கு அறிவிக்க வேண்டும். மனதிற்கு இசையாத மணாளனுடன் மாளிகையின் மலர் மஞ்சத்திலிருப்பதைப் பார்க்கினும் மனதிற்குகந்த மணவாளரின் மண்குடிசையில் வாழ்வது எவ்வளவோ மேலாயிற்றே..." என்றெல்லாம் நீ படித்தவற்றை அள்ளிவீசினாயே துள்ளிக் குதித்துக்கொண்டு. அடிக்கள்ளி ! இவற்றை எல்லாம் காற்றில் பறக்கவிட்டு இப்பொழுது உள்ளம் உங்களை நாடுகின்றதெனக் கள்ளக் கடிதம் எழுதுகின்றாய்.

"நீங்கள் தான் என்வாழ்விற்கு வழிகாட்டி இருதயத்திற்கு அளிக்கும் இன்பம், துயர்நீக்கும் துணை. கதியளிக்கும் காவல். நீங்கள் இன்றேல் என் வாழ்வு இல்லை" என்றெல்லாம் அடுக்குமொழிகளை வீசினாயே மிடுக்குடன். வஞ்சியே ! உனக்காக நெஞ்சம் குமுறுகின்றது; கொஞ்சமும் வெட்கமின்றி ! நடந்ததைப்பேசி பயன்......? ராஜம் ! நீ சுகமாயிரு !! உன் 60 வயது ஆசை நாயகனுடன் பாசமாயிரு !!! சாகசக்காரி ! என்னை எண்ணாதே! இதுவே உனக்கு அளிக்கும் ஆசி.

உன்னால் கொஞ்சி வஞ்சிக்கப்பட்ட,

ராஜன்.

ஃ ஃ ஃ

என்னை நம்பமறுக்கும் நாயகனே !

தங்கள் கடிதம் கண்டதும் நெருப்பில் அகப்பட்ட புழுப்போல் துடிக்கின்றது இப்பேதை உள்ளம், மலர்க் கூடையை மகிழ்வுடன் எடுத்து விளையாடும்போது அதில் பூ நாகம் தோன்றினால்......! எரியும் தணலில் எண்ணெயை வார்த்தால்......!! ஆசைமொழிகளை அள்ளிவீசியவர் சாகசக்காரி என்று சந்தேகப்பட்டால்!!! ஆருயிர் நண்பன் அலை கடலில் தள்ள எத்தனித்தால்... தாயே விரோதியானால்......என் நிலை(?) நான் என்ன செய்வது. நாட்டின் நன்மையை நாடும் நற்பெரு நாயகனே ! என்னை நம்புங்கள் கைவிடாதிர்கள் ! புறக்கணிக்காதிர்கள் !! சந்தேகப்பட்டு சித்திரவதை செய்யாதிர்கள் !!! மனமிருந்தால், ஊக்கமிருந்தால், உறுதியிருந்தால் கருத்தொருமித்து வாழ்வோம்.

இன்றேல் எந்தக்கரங்கள் என்னை ஆசையுடன் அணைத்ததோ—எந்தக்கரங்கள் என்முகத்தை அன்புடன் வருடியதோ—எந்தக்கரங்கள் என்கண்ணீரைக்கனிவுடன்

[illegible]தா அந்தக் கரங்களால் என்னைக் கொன்று விடுங்கள்...! ஆம் ! நான் மனச்சாந்தியுடன், நிம்மதியுடன் இறக்கின்றேன் நாயகனுக்குத் துரோகம்செய்த நன்றிகெட்டநாய் என்பதைப் பார்க்கினும், நாயகன் கையாலேயே மாண்டொழிந்தாள் என நானிலம் நவிலட்டும். கருத்தொருமித்த காதலனைக் கைவிட்டு, (தாலி) கட்டிய கணவனுடன் கண்யமாய் வாழ்கின்ருள் என்பதிலும், ஆசைநாயகனாலேயே அழிந்தொழிந்தாள் என அகிலம் கூறட்டும். ஊரிலுள்ள உல்லாசர்களின் உன்மத்தப்போக்கை உதறித்தள்ளி, உள்ளத்தை கொள்ளைகொண்ட உத்தமனாலேயே அவள் உயிர் உறிஞ்சப்பட்டதென உலகம் உறைக்கட்டும்.

உண்மையை உணரமறுக்கும் என்உயிரே! பாழும் பணத்திமிர்செய்யும் இப்பாதகச்செயலுக்கு நாம்அஞ்சியிருத்தலென்பது அடுக்குமோ! இவ்வகிலத்தில் வீராவேசத்துடன்தான் விளம்பினேன், நம் அன்பெனும் கயிற்றில் பிணைக்கப்பட்டிருக்கும் காதலை யாராலும் பிரிக்கமுடியாதென்று. இன்றும் அதையே உறுதியுடன் கூறுகின்றேன். 'நீங்களே என் ஆசைநாயகன். முல்லைக் கொடி படரத் தவிப்பதைப்போல் தவிக்கும் நான் ஓர் அனாதை அபலை, என்பதைமட்டும் மறவாதிர்கள்.

தங்களன்புக்குப் பாத்திரமான,

ராஜம்.

ஃ ஃ ஃ

அன்புராஜம்!

உன்பரிதாபத்திற்குறிய கடிதம் கண்டேன். அதற்கு காரணம் யாரென்றும் உணர்ந்தேன். உணர்ந்து மலம் நொந்தேன். பசப்புவார்த்தைகளை எழுதும் பச்சோந்தி என எண்ணிய எண்ணத்தை எழுதி உன்மனத்தைப் புண்படுத்திவிட்டேன். 'காதல் பாதையே கல்லும், முள்ளும் நிறைந்த ஓர்கரடு முரடானகாடுதான். அது மெல்லிய மல்லிகை மலரிதழ் விரித்த மணமஞ்சமல்ல' என்பதை நானும் உணர்கின்றேன் பாழும் பணத்திமிர், சமுதாயக்கொடுமை இவற்றினின்று விடுபட்டு நாம் ஓர் புதுமைகாதலர்களாய்! புதுவாழ்வு பெற்றவர்களாய்! காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவுபெற்றதே இன்பம் எனும் உண்மையை உன்மத்தப்பிடித்தமக்களைஉணரும்படிசெய்யவேண்டும். நிர்மலமாய் நீலவானிலே நீந்திவரும்வெண்ணிலவுபோன்று வெள்ளை உள்ள படைத்த உன்னைக் கள்ளி எனக் கடிந்துரைத்தேனே! என் எண்ணத்தை எழுதி உன் மனதையும் புண்படுத்திவிட்டேன். ராஜம்! உன்னை எவ்வளவு மட்டமாக மதித்தும், என்மேல் கொண்டஅன்பு ஒருசிறிதும் பிறழாது நடந்ததை நினைக்கவே...! அன்புக்கனிவே! எனக்கு நேர்ந்த இன்னல்களனைத்தையும் உன் கன்னல் மொழிகொண்டு கடிதில் விரட்டிய கண்ணின் கருவிழியே! என் அறியாமையைப் பொருட்படுத்தாதே.

இன்கனிமொழியை கடிதில்நோக்கும்,

ராஜன்.

அன்புக்காதலரே!

என் உடைந்த உள்ளத்தை நொடிப்பொழுதில் ஆற்றித் தேற்றிய ஆண்மையாளரே! தங்கள் கடிதம் கண்டதும் கதிரவனைக்கண்டகமலம்போல்அகமகிழ்ந்தது என் உள்ளம் எங்கே தங்கள் உள்ளம் மறுபடியும் என் சொல்லை நம்பமறுக்கின்றதோ என மருண்டேன் அதற்கு இடந்தரவில்லை என்கண்ணாளரின் உள்ளம்.

என்உயிரே! என் கணவரைப்போல் உதார குணமுள்ளவர் வேறு ஒருவரும் இருக்கமுடியாதென்பதே என் எண்ணம். அவர் எனக்குத்தாலி கட்டிய தகப்பன் என்று அவரே இயம்பும் அளவுக்கு நம் காதல் கனிந்துவிட்டது. ஆதியிலே பணப்பேய்பிடித்தபதர், பணத்தைக் காட்டி ஏழைகளை விலைக்கு வாங்கும் எத்தர் என்றெல்லாம் எண்ணினேன், அவருடைய உள்ளத்தை நன்கு உணராமல்.

நீங்கள் எழுதியகடிதங்களையும், என்கடிதப்பிரதிகளையும் எடுத்து நன்கு படித்துவிட்டு சென்றுவிட்டார் நான் பெட்டியைப்பூட்டாது போனது குறித்து ஓடோடியும் வந்தேன் பெட்டியைப் பூட்டுவதற்கு! அங்கே கடிதங்கள் நிலைகுலைந்திருப்பதைக் கண்ணுற்ற நானும் நிலைகுலைந்து போய்விட்டேன். மறுநாள் மெதுவாக ராஜன் என்பது யார் ராஜம்! என்று பேச்சை ஆரம்பித்தார். எண்ணற்ற சம்மட்டிகள் என்தலையை ஒருங்கே தாக்கியது. எங்கு இருக்கின்றோம், என்ன செய்கின்றோம் என்றறியாது கிலிபிடித்தஎனக்கு அருகிலுள்ள பொருள்களெல்லாம் சுழன்று என்தலையில் வீழ்வதைப் போன்றதோர் பிரமை. அந்நிலை எவ்வளவு நேரம் நீடித்திருந்ததோ என்னால் அறிய இயலவில்லை எப்படி இயலும்...............! கண் விழித்தபோது என்னையே என்னால் நம்பமுடியவில்லை. கனவுலகிலே சஞ்சரிக்கின்றோமா எனக் கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். கனவு இல்லை! நனவேதான் !! என்ன ஆச்சர்யம்!!! ஆதரவுடன் அணைக்கப்பட்டிருந்த ஓர் கையில் சிக்குண்டநான் அவருடையமார்பிலே சாய்ந்து கொண்டிருந்தேன். அவருடைய மறு கை விசிறிக் கொண்டிருந்தது. மயக்கம்தெளிந்து கெஞ்சும் பாவனையில் அவரை நோக்கினேன். அவருக்கு வாழ்வில் இழைத்த துரோகத்தை எண்ணி அவர் பிடியின்ின்று ஒருசிறிது விடுதலை பெற்ற என்னையும் அறியாது மனதிலே பொதிந்துகிடந்த பாரங்களனைத்தும் கண்ணீர் உருவில் வெளிவந்தன தாரை தாரையாய்.

நிகழ்ச்சிகளை ஒருவாறறிந்த அவர் "ராஜம்! உனக்குத் துரோகியும், உன் இளமைக்கு விரோதியுமாயிருந்த என்னை மன்னித்து வி...........டு...........!

கட்டுரையாளருக்கு!

தாங்கள் எழுதி அனுப்பும் கட்டுரை, கவிதை, கதைகளில் அமைக்கும் புனைப்பெயரோடு முழு முகவரியும் எழுத கோருகிறோம். பிரசுரிக்கப்படாத கட்டுரைகள் திருப்பிப் பெற விரும்புவோர் போதிய தபால்பில்லைகள் அனுப்பவேண்டும்.

ஆசிரியர்

நான் உன்......த.......க்......தை !......" என்று கூண்டில் நிறுத்தப்பட்ட குற்றவாளியைப்போல் கெஞ்சினார்.

இக்கோலத்தைக்கண்ணுற்ற என் கண்களினின்றும் தடைகட்டப்பட்ட வெள்ளம் உடைப்பெடுத்துக் கொள்வதுபோல் கண்ணீர் உதிர்ந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு "நான் செய்த பெரும் துரோகத்திற்கு நீங்கள்தான்...எ...ன்...னை...ம..ன்...னி...க்...க" என்றேன் தடுமாற்றத்துடன் தேம்பியவண்ணம்

"ராஜம்! உன்னை மன்னித்தேன். உன் சுக வாழ்வே என் இலட்சியம். உன் ஆசை நாயகனுடன் பாசமாய் இரு. நீ என்...ம...க...ள்..." எனக்கூறி முடிப்பதற்குள் குழிவிழிந்த அவர் கண்களினின்று இரண்டொரு கண்ணீர்த்திவலைகள் சுருக்கம் விழுந்த கன்னங்களில் தேங்கி நின்றது.

அடியற்ற மரம்போல் அவர் பாதத்தில் வீழ்ந்து என் துயர் நீங்கும்வரை, பாரம் குறையும்வரை விம்மி, விம்மி அழுதேன்; அவருடைய (அப்பா) ஆறுதலையும் கேளாது, என் பெற்றோர்களும் ஒருவாறு இசைந்து விட்டனர் நம் புது வாழ்விற்கு அவரின் (தாலிகட்டிய தகப்பன்) ஆசிர்செய்தியும் பக்கபலம். இனி நாம் புது வாழ்வு பெற்றவர்கள்! புதுமைக் காதலர்கள்!! புரட்சியிலே பூத்த புது மணமக்கள்!!!

தங்கள் அன்புள்ள,

ராஜம்.

ஃ ஃ ஃ

அன்புசான்ற பெரியாருக்கு!

நலம். தங்கள் நலனறிய வெகு ஆவல். வேற்றாரில் வாசம் செய்தாலும் எங்கள் இளம் உள்ளம் உங்களையே நாடுகின்றது. காதல் உலகிலே சுதந்தரத்துடன் திரிந்த இளம் வானம்பாடிகளின் இன்னிசைக் கீதத்தைக்கேட்டு ஆனந்திக்கத்தக்க புது வாழ்விற்கு மெருகிட்டுத் தந்த பெரும் பணிக்காக நன்றி செலுத்த வகையறியாது தவிக்கின்றோம். தாங்கள் வரும் பொங்கற் பண்டிகைக்கு அவசியம் எங்கள் இல்லத்திற்கு வந்திருந்து எங்கள் புது வாழ்வை ஆசிர்வதிக்கவும்.

தங்களன்பு மறவாத,

ராஜராஜன்.

★★★★★★★★★★★★★★★★★★

அடுத்த இதழில்...!

★ புறநானூற்று புலவர்கள்

★ மோட்டார் போன்ற இயந்திரத் தொழில் சம்பந்தமான கட்டுரைகள்

★ தொழிலும், இழிவும்.

போன்ற கட்டுரைகளும், கதைகளையும்தாங்கி வெளிவருகின்றது....!

★★★★★★★★★★★★★★★★★★

மோசடிகள்! ஏமாராதீர்கள்!!

திருச்சிபோன்ற பெரிய நகரங்களில் புதுமாதிரி மோசடிகள்.

விபரம் தெரியாத கிராமவாசிகளை ஏமாற்றி பணம் பறிக்க சிலபேர்கொண்ட மோசடிக் கூட்டம் திருச்சி போன்ற நகரங்களில் கிளம்பியிருக்கிறதென தெரிகிறது. இக்கூட்டம் இவைதுசினிமாவோ நாடகமோ பார்த்துவிட்டு ரயிலடிக்கோ பஸ்ஸ்டாண்டிற்கோபோகும் வெளியூர்வாசியைப் பின்பற்றி, பித்தளையால் செய்யப்பட்ட சங்கிலி போன்ற நகைகளை, பவுன் எடை, கிரயம் அடங்கிய பட்டியல் அடங்கியபொட்டலங்களை முன்கூட்டியே தரையில் போட்டு வைத்து பின்தொடர்ந்து — செல்வதும். இக் கிராமவாசி கீழேகிடக்கும் இந்நகையை எடுத்தால் பங்கு கேட்டு, உள்ள தொகையை கைப்பற்றிக்கொள்வதும், எடுக்காவிட்டால் தானேஎடுத்து வெளிச்சத்தில் பிரித்து பார்த்து ஆச்சர்யப்படுவதைப்போல் நடித்து கிராமவாசியை தன்பால்வசப்படுத்துவதும், இந்த நடிப்பையறியாத கிராமவாசி பேராசையால் தன் கையிலுள்ள மோதிரம், கடிகாரம், பணம் போன்றவைகளை கொடுத்து இந் நகையை வாங்கிக்கொள்வதும், கூடவந்த நபர் மறைந்தவுடன் பின்னர் உண்மைதெரிந்து பஸ்ஸுக்கும், சாப்பாட்டிற்கும் திண்டாடுகிறார்களென்று தெரியவருகிறது.

ஆகவே, திருச்சிபோன்ற பெரிய நகரங்களுக்குப் போகும் கிராமவாசிகள் பேராசை கொண்டு பெருநஷ்டமடையவேண்டாமென கேட்டுக்கொள்ளுகிறோம்.

சர்க்காரும் இந்த கூட்டத்தைப் பிடித்து தகுந்த தண்டனை அளிக்க கேட்டுக்கொள்ளுகிறோம். (ஆ-ர்)

செய்தி.

ஜெயங்கொண்டம் L. S. S. கட்டிடத்தில் 10—9—50 மாலை 4மணிக்கு தோழர். அ. இ காதர்கான் அவர்கள் தலைமையில், நடந்த சில்லரை உணவு பங்கீடு கடை வியாபாரிகள் கூட்டத்தில். "சில்லறை உணவு பங்கீட்டு வியாபாரிகள் கழகம்" நிறுவப்பட்டது.

கீழ்க்கண்டவர்கள் கழக அலுவலக செயற்குழுவினர்களாக நியமிக்கப்பட்டனர்.

தலைவர்: திரு. S. சிவசாமி உபதலைவர்: திரு. R. விநாயகம், செயலாளர்கள்: திரு. S. கிருஷ்ணமூர்த்திஅய்யர், R குருமூர்த்தி அய்யர், பொருளாளர்: திரு T.C. நாராயணசாமிமுதலியார், செயற்குழு உறுப்பினர்கள்: திருவாளர்கள் K. சின்னராஜலு ரெட்டியார் சின்னதம்பி படையாட்சி, ரெங்கையஞ் செட்டியார், M. சூசைநாதன். A T. V. ராஜகோபால் செட்டியார், M. S. தங்கராசு படையாட்சி, ராமசாமி பிள்ளை, ராஜமாணிக்க படையாட்சி, சதாசிவ படையாட்சி, சாமிதுரை படையாட்சி. (ஓ-நி)

சோப்புகளில் சிறந்தது
"ஆனந்தா சோப்"

★ ஆடைகளை வெளுப்பதில் நிகரற்றது ★

தயாரிப்பவர்:-

ஆனந்தா சோப் ஒர்க்ஸ்,

சாக்கோட்டை P.O. : : கும்பகோணம்:

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketchari Street, Jayankondacholapuram.